DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 200/2022**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சந்திரசேகர்** | Caste | : | |
| Father Name | : | **ஞானமூர்த்தி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **26.03.2026.**

**PW - 9**

**(** **1** முதல் **13, 15, 16** எதிரிகள் ஆஜர். **14** ஆம் எதிரி ஆஜரில்லை**.** மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், திருவானைக்கோவில், மேலகொண்டையம்பேட்டை வடக்கு தெருவில் குடியிருக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 14 ஆம் எதிரியை தெரியாது. போலிசார் என் முன்பாக யாரையும் கைது செய்யவில்லை, போலிசார் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், போட்டேன், அது எதற்கு என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் 1 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அதசாஆ.6** ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம்

என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அதசாஆ.7** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரித்தார்கள் என்றும், அதில் கடந்த 10.08.2020 அன்று காலை 11.30 மணியளவில் நானும், சரவணனும் ரணியம்மன் கோவில் அருகே இருந்தபோது போலிசார் எங்கள் முன்னிலையில் ரஞ்சித், பிரபாகர், ஆகாஷ் ஆகியோரை கைது செய்து விசாரித்தார்கள் என்றும், அப்போது ரஞ்சித் தாமாக முன்வந்து எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நாங்கள் இருவரும் கையொப்பமிட்டோம் என்றும், பின்பு 12.50 மணியளவில் எதிரி ரஞ்சித் எங்கள் முன்னிலையில் ரணியம்மன் கோவில் அருகில் உள்ள முள்காட்டிலிருந்து நான்கு சவுக்கு கட்டைகளை எடுத்து எங்கள் முன்னிலையில் ஆஜர் செய்தார் என்றும், அதை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார் என்றும் போலிசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு எதிரிகள் பக்கத்து தெருவை சேர்ந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.